**செய்தி வெளியீடு எண்:116** **நாள்:13.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (13.2.2021) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் 100 கோடியே 87 லட்சம் 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 681 காவலர் குடியிருப்புகள், 1 காவல் நிலையம், 2 இதர காவல்துறை கட்டடங்கள், 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும் மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி மற்றும் திருப்பாலை, தஞ்சாவூர் மாவட்டம், சோழவரம் ஆகிய இடங்களில் 11 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள காவல் நிலையங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் ஆகியவற்றையும் துவக்கி வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை காவல் துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல் துறை அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டம் – மயிலாடுதுறை, நாமக்கல் மாவட்டம்– கடச்சநல்லூர், தென்காசி மாவட்டம் – ஊத்துமலை, திருவள்ளூர் மாவட்டம் – பெரும்பாக்கம் மற்றும் கனகவல்லிபுரம், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – விக்கிரமசிங்கபுரம், திருப்பூர் மாவட்டம் – நல்லூர் ஆகிய இடங்களில் 91 கோடியே 49 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 681 காவலர் குடியிருப்புகள்;

திருப்பூர் மாவட்டம் – காங்கேயத்தில் 88 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு காவல் நிலையக் கட்டடம்;

செங்கல்பட்டு மாவட்டம் – மேலக்கோட்டையூரில் முதல்கட்டமாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவலர் பொதுப்பள்ளிக் கட்டடம்; இராமநாதபுரம் மாவட்டம் – முதுகுளத்தூரில் 75 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை, மதுரை மாவட்டம் – திருமங்கலம் தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திக்குளம் ஆகிய இடங்களில் 2 கோடியே 73 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

என மொத்தம், 100 கோடியே 87 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி மற்றும் திருப்பாலை, தஞ்சாவூர் மாவட்டம், சோழவரம் ஆகிய இடங்களில் 11 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள காவல் நிலையங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் முனைவர் சி. சைலேந்திர பாபு, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம.நா.மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**